




ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

## உபதேச ரத்னங்கள் :

### டாக்டர் ஏ.வி. ரங்காச்சாரி – தில்லைத் திருச்சித்ரகூடம்

*Sri U.Ve. A.V. Ranga Chariar*

ஸ்ரீவைஷ்ணவம் அநாதியானது. எம்பெருமான் உலகைத் தோற்றுவித்தபோதே ஸ்ரீவைணவம் தோன்றியது. புரம வைதிகமதமான ஸ்ரீவைணவ சித்தாந்தத்தின் தத்துவங்களை உலகிற்கு உபதேசித்து எங்கும் பரவச் செய்தவர்கள் ஆழ்வார்களும், ஆசாரியர்களும் ஆவர். வேதக்கருத்துக்களை எல்லாம் அனைவரும் அறிந்து ஒழுகும்படி திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களை அருளிச் செய்து, தீதில் நன்னெறியாக ஞானச்சுடர் விளக்கினை ஏற்றினவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் ஏற்றிய ஞானச்சுடர் விளக்கினை எல்லோருடைய உள்ளங்களில் விளங்கச் செய்தவர்கள் ஆசாரியர்கள். இவர்களுடைய உபதேசங்கள் ரத்னங்கள் போன்றவை. இவையே ஸ்ரீவைணவர்கட்கு வழிகாட்டியாகும். எனவேதான் ஸ்ரீமந் மணவாளமாமுனிகள் தமது உபதேச ரத்தினமாலையில் ஆழ்வார்கள் வாழி, அருளிச் செயல் வாழி, தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி – ஏற்பாருமுய்ய அவர்கள் உரைத்த அவைகள்தாம் வாழி, செய்யமறை தன்னுடனே சேர்ந்து. இப்பட்ட ஆழ்வார் ஆசார்யர்களின் உபதேச ரத்னங்களில் தூமணிகளான உபதேசங்கள் ஈண்டு கொடுக்கப்படுகின்றன.

**I. ஆழ்வார்களின் உபதேசங்கள் :**

முதலாழ்வார்கள் மூவரும் கண்ணன் கீதையில் தெரிவித்த மலர் வழிபாட்டை உபதேசம் செய்கிறார்கள்.

**பொய்கை ஆழ்வார் :**

**மனமாசு தீரும் அருவினையும் சாரா – தனமாய தானே கைகூடும் - புனமேய பூந்துழாயனடிக்கே போதொடு நீரேந்தி – தாம் தொழா நிற்பார் தமர்.**

**பூதத்தாழ்வார் :**




தாமுளரே, தம்முள்ளமுள்ளுளதே, தாமரையின் பூவுளதே, ஏத்தும் பொழுதுண்டே – வாமன் திருமருவு தாள் மருவு சென்னியரே – செவ்வே அருநரகம் சேர்வதரிது.

**பேயாழ்வார் :**

**பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் - ஐந்து**
**நெருப்பிடையே நிற்கவும் நீ வேண்டா – விருப்புடைய**
**வெ.ஃகாவே சேர்ந்தானை மெய்மலர்த்தூய்க் கை தொழுதால்**
**அ.ஃகாவே தீவினைகளாய்ந்து.**

**திருமழிசையாழ்வார் :**

மலர் வழிபாட்டை செய்ய வேண்டிய இடம் நாராயணனே என்று தெரிவிக்கிறார்.

**வீடாக்கும் பெற்றியறியாது – மெய்வருத்திக்**
**கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர் - வீடாக்கும்**
**மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான் - விண்ணவர்க்கு**
**நற்பொருள்தான் நாராயணன்.**

**நம்மாழ்வார் உபதேசங்கள் :**

நம்மாழ்வார் அவதாரங்களில் (சரம ச்லோகம் அருளிச் செய்த) வராக, ராம, கிருஷ்ண அர்ச்சாவதார எம்பெருமான்களுக்கு தொண்டு செய்வது, திருநாமம் சொல்வது திருவாய்மொழி பாடியாடி அனுபவம் ஆகியவை செய்யவேண்டும் என்று கூறுகிறார்.

1. ஞானப்பிரானையல்லால் இல்லை நான் கண்ட நல்லது.
2. கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ.
3. கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்.
4. அமரர்கள் அதிபதி துயரருசுடரடி தொழுதெழு.
5. திருவேங்கடமாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே.
6. ஒழுவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்.
7. தொண்டே செய்து என்றும் தொழுது வழி ஒழுக பண்டே பரமன் பணித்த பணி வகையே.

8. கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர். எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே.
9. பேரும் ஓர் ஆயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே.
10. சடகோபன் சொல் பாடியாடி பணிமின் அவன் தாள்களே.

**குலசேகராழ்வார் :**
இப்பிறவியில் எம்பெருமான் கைங்கர்யத்தை இழக்காமல் எப்போதும் தொண்டு செய்ய வேண்டும். "தில்லைத் திருச்சித்ரகூடந்தன்னுள் என்றும் நின்றான் அவன் இவன் என்றேத்தி,
நாளுமிறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் நீரே".

**பெரியாழ்வார் :**
ஆயிரநாமம் சொல்லி, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பல்லாண்டு பாடுமின்.

**ஆண்டாள் :**
கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப் பிறவி செய்யாதே - இனிப்போய்ச் செய்யும் தவம் தான் என்?

**தொண்டரடிப்பொடியாழ்வார் :**
திவ்யதேசத் திருநாமம் சொன்னாலே போதும் என்கிறார்.
அறிவிலா மனிசர் எல்லாம் அரங்கமென்றழைப்பராகில்
பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியும்.

**மதுரகவி :**
பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான் குருகூர் நம்பி.

**திருமங்கை மன்னன் :**
கண்ணன் அருளுக்கு ஆளாகாதவர் மனிதர் அல்லர்.
ஆள்விடையேழன்றடர்த்தார்க்கு ஆளானாரல்லாதார் மானிடவர் அல்லர்.

**அமுதனார் :**

எம்பெருமானார் ஸம்மந்தத்தாலே எல்லா நன்மைகளையும் பெறலாம் என்று அறிவுறுத்துகிறார்.

**பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல**
**திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் - செறுகலியால்**
**வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த**
**அருந்தவன், எங்களிராமானுசனை அடைபவர்க்கே.**

**II. ஸ்ரீமந் நாதமுனிகள் :**

மத்ஸ்யத்தினுடைய ஆகாரமெல்லாம் ஜலமயமாயிருக்கிறாப்போலே ஸ்ரீமானுடைய வடிவித்தனையும் ஸ்ரீமயமாயிருக்கும் என்று ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச் செய்வார். பிராட்டி பெருமாளுடைய பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி அர்ச்சரூபங்கள் அனைத்திலும் அவனைவிட்டுப் பிரியாது கூடியிருப்பதால், மீன் ஜலமயமாய் இருப்பது போல எம்பெருமானுடைய வடிவும் கருணையே வடிவெடுத்து பிராட்டி மயமாய் இருக்கும் என்று ஸ்ரீமந் நாதமுனிகள், உலகத்தை ரக்ஷிக்க பெருமாளும் பிராட்டியும் விட்டுப் பிரியாது ஒருதன்மையில் இருப்பதைத் தெரிவிக்கிறார்.

**III. ஸ்ரீ ஆளவந்தார் :**

ஆசார்யனை முன்னிட்டுக்கொண்டு பெருமாளிடம் ப்ரபத்தி செய்தவனுக்கு எம்பெருமாள் நியமனப்படி நடக்கும். ஆத்மயாத்திரையிலும், அவரவரது கர்மவினைப்படி நடக்கும் அன்றாட வாழ்க்கையிலும் எந்தப் பொருப்பும் இல்லை. அப்படியில்லாமல் தன் முயற்சியால் மாற்றலாம் என்று நினைத்தானாகில் இவன் பெருமாளிடம் செய்த சரணாகதியும் குலைந்து, எம்பெருமானே ஸர்வரக்ஷகன் என்ற நம்பிக்கையையும் இழந்தவனாகிறான். எனவே இஹ, பர வாழ்க்கை தனக்குக் கட்டுப்பட்டதல்ல: எம்பெருமான் இட்ட வழக்கே என்று உறுதியோடு இருக்க வேணும்.

**திருக்கோட்டியூர் நம்பி :**

ப்ரபன்னனுக்கு விலக்க வேண்டியவை ஆறு. அவையாவன,

1. **ஆச்ரயண விரோதி :**

அஹங்கார மமகாரங்கள் எம்பெருமானை ஆச்ரயிக்காதபடி செய்துவிடும்.

2. **ச்ரவண விரோதி :**

மற்ற தெய்வங்களைப் பற்றிக் கேட்பது எம்பெருமானைப் பற்றிக் கேட்பதைத் தடுத்து விடும்.

3. **அநுபவ விரோதி :**

உலக விஷயங்களில் ஈடுபாடு பகவதனுபவத்தைத் தடுத்துவிடும்.

4. **ஸ்வரூப விரோதி :**

எம்பெருமான் ஸம்மந்தத்தை உணர்ந்து தொண்டன் என்ற நினைவில்லாமல் தன்னை சுதந்திரனாக எண்ணிச் செயல்படுவது.

5. **பரத்வ விரோதி :**

ஸ்ரீமந் நாராயணனைத் தவிர மற்ற தெய்வங்களையும் பரம்பொருளாக மயங்குதல்.

6. **ப்ராப்தி விரோதி :**

எம்பெருமானை பரம போக்யமாக நினைக்காமல் கைவல்ய நிஷ்டரோடு கூடி இருத்தல்.

## V. ஸ்ரீ ராமாநுஜர் :

1. ஆசாரிய அபிமானம் தவிர மோட்சத்திற்கு உபாயம் இல்லை. பாகவத அபசாரம் தவிர மோட்சத்திற்கு விரோதம் இல்லை. கைங்கர்யம் தவிர வேறு புருஷார்த்தம் இல்லை.

2. பகவத் கைங்கர்யத்திலும், பாகவத கைங்கர்யத்திலும், ஆசாரிய கைங்கர்யத்திலும் சமபுத்தி கொள்ளவேணும்.

3. ஆசாரியர் வழிகாட்ட, ஞானத்தை அடைந்து, பிறகு ஐம்புலன் வழி சென்று அடிமைப்பட்டிருக்கக் கூடாது. புலனடக்கம் அவசியமாயினும், அதுவே பகவானை அடைவிக்காது. (ஜைன, பௌத்தர்களைப் போல ஒழுக்க நெறியே முத்திநெறி என்று ஸ்ரீவைஷ்ணவம் கருதவில்லை).

**VI. நஞ்சீயர் :**

எம்பெருமான் பாகவத அபசாரத்தைப் பொறுக்கமாட்டார். எம்பெருமான் செய்த அவதாரங்களுக்கு அடிப்படைக் காரணம் பாகவத அபசாரத்தைப் பொறுக்க முடியாமையே.

**VII. நம்பிள்ளை :**

பிறர் கஷ்டம் கண்டு ஐயோ என்று இரங்குவதே வைஷ்ணவ லட்சணமாகும்.

**VIII. பெரியவாச்சான் பிள்ளை :**

எம்பெருமானையே பற்றியுள்ள ப்ரபன்னனுக்கு ஐந்து ஸ்பர்சம் (தொடர்புகள்) விடத்தக்கன. ஆவையாவன : சைவ ஸ்பர்சம், மாயாவாத ஸ்பர்சம், ஏகாயந ஸ்பர்சம், உபாயாந்தர ஸ்பர்சம், விஷயாந்தர ஸ்பர்சம். இவை ஐந்தும் போக்கவேண்டும். எம்பெருமானே எல்லோருக்கும் மேலான பரம்பொருள் என்று அனுசந்தித்தால் சைவ ஸ்பர்சம் போகும். எம்பெருமானது அனைத்து கல்யாண குணங்களை அனுசந்தித்தால் மாயாவாத ஸ்பர்சம் போகும். எம்பெருமான் ச்ரியப்பதி என்று அனுசந்தித்தால், தனி நாராயணனைத் தொழும் ஏகாயன ஸ்பர்சம் போகும். எம்பெருமானெ சிறந்த உபாயம் என்பதை உணர்ந்தால்
வேறு உபாயம் பற்றிய ஸ்பர்சம் அறும். எம்பெருமானது திவ்ய மங்கள விக்ரஹத்தை அனுபவிக்க, உலக விஷயப்பற்று போகும் என்பது பெரியவாச்சான் பிள்ளையின் உபதேசம்.

**IX. வடக்குத் திருவீதிப் பிள்ளை :**

ஸ்வாபிமானத்தாலே செருக்குற்று, அஹங்கார மமகாரங்களால் எம்பெருமானுடைய கோபத்து ஆளாகிய சேதனனுக்கு ஆசார்ய ஸம்மந்தமே கதியாகும் என்று வடக்குத் திருவீதிப் பிள்ளை பலகாலும் அருளிச் செய்வார்.

**X. பிள்ளைலோகாச்சாரியரின் உபதேசங்கள் :**

**முமுக்ஷுப்படி :**

1. எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கு உரியன் அன்றிக்கே ஒழியவேணும். ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா கைங்கர்யங்களுமம் செய்ய வேணும் என்பதே திருமந்த்ரத்தின் ஸாரமான பொருள்.
2. இந்த கைங்கர்யங்களை பெருமாளும், பிராட்டியுமான சேர்த்தியிலே செய்ய வேணும்.
3. ஸ்ரீவைஷ்ணவ லட்சணங்கள் :
   - i. புறம்புண்டான புற்றுக்களை வாஸனையோடே விடுகை.
   - ii. எம்பெருமானே தஞ்சமென்று பற்றுகை.
   - iii. எம்பெருமான் உகந்தருளின திவ்யதேசங்களில் ஈடுபாடு கொண்டு குணானுபவ கைங்கர்யங்களிலே பொழுது போக்குவது.
   - iv. இப்படியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கை.
   - v. திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகை.
   - vi. ஆசார்யனிடம் ப்ரேமம் கொள்ளுதல்.
   - vii. ஆசார்யனிடமும், எம்பெருமானிடமும் நன்றியுள்ளவனாய் இருத்தல்.
   - viii. ஞானம், வைராக்யம், சாந்தி இவைகளை உடைய பரம ஸாத்விகரோடு ஸஹவாசம் செய்வது.
   - ix. நமக்கு பேறு (பேரின்ப வாழ்வு) நிச்சயம் உண்டு என்ற உறுதி.
   - x. அந்த பேரின்ப வாழ்வைப் பெறவேண்டும் என்ற ஈடுபாட்டுடன் இருத்தல்.

**4. தத்வத்ரயம் :**

ஈச்வர ஸ்வரூபம் பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்று ஐந்து நிலைகளில் இருக்கும். இதில் அர்ச்சாவதாரம் அடியவர்கள் விரும்பும் பொருள்களில் ஸாந்நித்யம் பண்ணி, அபராதங்களை காணாக் கண்ணிட்டு, கோயில்களிலும், க்ருஹங்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலையாகும்.

**5. ஸ்ரீ வசனபூஷணம்:**




1. ஸ்ரீ ராமாயணம் பிராட்டி புருஷகாரத்தின் வைபவத்தைத் தெரிவிக்கிறது.
2. மஹாபாரதம் எம்பெருமானே உபாயம் என்று அறிவிக்கிறது.
3. பகவானையே உபாயமாகப் பற்றுவதற்கு இன்ன இடங்களில் செய்வது (தேசநியமம்), இன்ன காலத்தில் செய்வது (கால நியமம்), இன்னமுறையில் செய்வது (ப்ரகார நியமம்), யார் யார் செய்வது (அதிகாரி நியமம்), என்ன பயனுக்காகச் செய்வது (பல நியமம்) இல்லை. அர்ச்சாவதாரத்திலே செய்வது என்ற விஷய நியமமே உள்ளது. ஆனால் பிரபத்தியை உபாயமாக்கக் கூடாது. எனவே சேதனனுக்கு முயற்சி ஏதும் தேவையில்லை. ஈச்வரனே எல்லாமுமாக இருப்பதால் சேதன லாபம் ஈச்வரனுக்கு. அதனைப் பெற அவனே முயற்சிக்கிறான்.
4. பிரமபத்த நிஷ்டனுக்கு ஒரு நன்மையும் தேட வேண்டியதில்லை. அஹங்கார மமகாரங்களை விட்டு, ஸ்ரீ வைஷ்ணவர்களை ஆத்ம பந்துக்களாகவும், ஈச்வரனைக் கண்டால் பிதாவைக் கண்டாற் போலவும், ஆசாரியனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாற் போலவும், தனக்கு ஒரு கஷ்டம் வந்தால் இது கர்மபலம் என்று கொண்டு மனம் தளராமல் உகந்தருளின திவ்யதேசங்களில் அபிமானமும், ஆதரவும் கொண்டு, மங்களாசாசனமும், கைங்கர்யமும் செய்து கொண்டு சதாசாரியனைப் பற்றிக் கொண்டு வாழ வேண்டும்.
5. இந்தப்படி வாழும் போது, இருக்கவேண்டிய இடம் ஆசாரியன் இருக்கும் இடமும் பகவான் இருக்கும் ஸந்நிதியும்: அநுசந்தானம் செய்ய வேண்டியது ஆசாரிய வைபவம், குரு பரம்பரை, பூர்வாசாரியர்களுடைய உபதேசங்கள், அநுஷ்டானம் ஆகியவை. விடவேண்டியவை, அவைஷ்ணவ சஹவாஸமும் அபிமானமும், பகவதபசாரம், பாகவத அபசாரம், அஹஸ்ய அபசாரம் ஆகியவை. செய்ய வேண்டியது ஆசாரிய கைங்கர்யமும், அவன் நியமிக்கும் பகவத் கைங்கர்யமும்.
6. ஆசார்ய அபிமானமே உத்தாரகம் என்ற நிஷ்டையில் இருக்கவேணும். சகல சாஸ்திரங்களும் மோக்ஷத்திற்கு உபாயமாக கர்ம, ஞான பக்திகளைக் கூறி, பிரபத்தி என்ற சரணாகதியை சுருங்கக் கூறியுள்ளன. கண்ணன் பகவத்கீதையில் 18 அத்யாயங்களில் இதர உபாயங்களை விரிவாகக் கூறினான். அவற்றைக் கேட்டு
7. அஞ்சிய அர்ஜுனனுக்கு, ஆகில் அவற்றை எல்லாம் விட்டு விட்டு, என்னையே பற்று என்றான். ஆனால் பிள்ளைலோகாசாரியார் கர்ம, ஞான பக்திகளின்




ஸ்தானத்தில் பிரபத்தியை வைத்து, பிரபத்தியில் நடைமுறை தோஷங்களைக் காட்டி, ஆசார்யனே உபாயம் என்று கூறி, அந்த ஆசார்யனை தான் பற்றும் பற்றுதலைக் காட்டிலும், ஆசார்யன் தன் கருணையாலே இவனை மேல் விழுந்து அங்கீகரிப்பதே சிறந்த உபாயம் என்று அறுதியிட்டுள்ளார். அதாவது, ஆசார்ய அபிமானத்திலே தான் ஒதுங்கி இருப்பதே சிறந்த உபாயம் என்பதே ஸ்ரீவசனபூஷணத்தின் முடிவான கருத்தாகத் தெரிவித்துள்ளார். எனவே, ஸ்ரீவைஷ்ணவன் பின்பற்ற வேண்டியது ஆசார்யன் அபிமானத்தைப் பெறுவதே. இதனையே மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையின் சீரிய உபதேசமாக "இருள் தருமா ஞாலத்தே இன்பமுற்று வாழும் தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து" என்று அருளிச் செய்துள்ளார். மேலும் ஸ்ரீவசன பூஷண திவ்ய சாஸ்திரத்தின் ஆழ்ந்த பொருள்களை ஆசார்யன் மூலமாக உணர்ந்து, அதன் அறிவுக்கு ஏற்ற அனுஷ்டானத்தில் ஊன்றியிருக்க வேணும். அதனுடைய செவ்விய பொருள்களை ஆராய்ந்து பார்த்து, பிறர்க்கும் எடுத்துரைக்க வேணும் என்றும் உபதேசம் செய்துள்ளார்.

**Xi. ஸ்ரீ மணவாளமாமுனிகளின் உபதேசங்கள் :**

திருவாய்மொழி நூற்றந்தாதியில் நம்மாழ்வாரையே பற்ற வேண்டும் என்கிறார்.

1. மாறன் சொல் மானிடரை வாழ்விக்கும்.
2. காரி மாறன் சொல்லை ஓதிடவே உலகு உய்யும்.
3. மாறன் உரையதனை ஆய்ந்துரைப்பர் ஆட்செய்ய நோற்பார்.
4. மாறன் பாதமே உற்ற துணை.
5. சடகோபன் திருவடிக்கே வாய்ந்த அன்பை நாடோறும் வை.
6. மாறன் பூங்கழலைப் புகழ்.
7. உலகீர் மாறனை நாத்தழும்ப ஏத்தும்.
8. நீடுலகீர் மாறனையெ வணங்கும்.
9. மாறன் பொன்னடியே நந்தமக்குப் பொன்.
10. மாறன் செறிவாரை நோக்கும் - (அண்டினவரைக் கைவிடாதவர்)
11. மாறன் எனக் குன்றிவிடுமே பவக்கங்குல்.
12. மாறன் எனக் கேதமுள்ளதெல்லாம் கெடும்.
13. மாறனை வழுத்துதலால் வாழ்ந்தது இந்த மண்.
14. மாறன் தாள் நந்தமக்குப் பேராக நண்ணு.

15. தக்கபுகழ் மாறன் எங்கள் சார்வு.

**உபதேச ரத்தினமாலை :**

1. ஆழ்வார் அவதார திருநட்சத்திரங்களைக் கொண்டாட வேணும்.
2. அருளிச் செயல் வ்யாக்யானங்களை அன்போடு கற்று அறிந்து பிறர்க்கும் பேச வேண்டும்.
3. ஞானம் அனுட்டானம் நன்றாகவே உடைய குருவை அடைய வேணும்.
4. தன் ஆசாரியனிடத்தில் பூரணபக்தி கொள்ள வேணும். ஆசாரிய அபிமானம், எம்பெருமான் அபிமானத்தைப் பெற்றுத் தரும்.
5. பூர்வாசாரியர்கள் அனுஷ்டித்த ஆசாரங்களை நன்கு அறியாதவர்கள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு மயங்கக் கூடாது.
6. ஞான அனுஷ்டானங்களை வளர்க்கக்கூடிய அனுகூலரான ஸத்துக்களை விட்டுப் பிரியாமலும், ஸ்வரூபத்தைக் கெடுக்கக்கூடிய அஸத்துக்களை அணுகாமலும் வாழ வேண்டும்.

**எறும்பியப்பா :**

ஸ்ரீமந் மணவாளமாமுனிகளின் திருவடியாகிற பொன்னடியாம் செங்கமலப் போதுகளே நமக்குத் தஞ்சம் என்ற ப்ரதிபத்தியுடன் வாழவேண்டும் என்பது பெரியபெருமாள் நியமனம்.

**முடிவுரை :**

நம்முடைய ஆழ்வார் ஆசாரியர்க்ள அருளிச் செய்த உபதேசங்களையும், அவற்றின் அர்த்த விசேஷங்களையும், அவர்களது அனுஷ்டானங்களையும் தெரிவிக்கும் சில முக்யமான உபதேச ரத்னங்களே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளை நிதி பெற்றாற்போலே உணர்ந்து, ஆசார்யனைப் பற்றி வாழ்பவர்கள் இவ்வுலகத்திலேயே ஆனந்தமாக நெடுநாள் வாழப் பெறலாம் என்பதை ஸ்ரீமந் மணவாளமாமுனிகள் "பூர்வாசாரியர்கள் போதமனுட்டானங்கள் கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீ தேறி, இருள் தருமா ஞாலத்தே யின்பமுற்று வாழும் தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து" என்று அருளிச் செய்துள்ளார். அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் இந்த உபதேச ரத்னங்களை தினமும் அநுஸந்தித்து, ஆழ்வார் எம்பெருமானார், ஜீயர் இன்னருளுக்கு என்றும் இலக்காகி சதிராக வாழ்ந்திடுவார்களாக.

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.**